Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்திரம் எனக்கு உண்டு சங்.16:6 ஆகஸ்ட் 2022 No.8

புயலின் மத்தியில் உறுதியும் தைரியமும்

Confidence and Courage in the midst of the storm

Charles H. Spurgeon (1834-1892)

"ஆனபடியால் மனுஷரே, திடன் கொள்ளுங்கள். எனக்குச் சொல்லப் பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக் கிறேன்" அப்.21:25.

மிகவும் ஆபத்தான நேரத்தின் மத்தியில் ஒரு தைரியமுள்ள மனிதன் இருப்பது அவனோடிருப்பவர்களுக்கு மிகப்பெரிய ஆறுதலாயிருக்கும். மேற் கூறிய வசனத்தில் பவுல் கூறும் வார்த்தை கள் இதற்கு ஆதாரமாகும். பவுல் தைரிய மாகவும், அமைதியாகவும், சந்தோஷ மாகவும் தமது வார்த்தைகளால் கப்பலி லிருந்த அனைவரையும் தைரியப் படுத்தினது ஒரு மேலான அனுபவம். சரித்திர சம்பவங்களிலும் யுத்த காலங் களில் இவ்வாறு தைரியமூட்டும் நபர்கள் வெற்றிக்கு ஏதுவாயிருந்திருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

தேவ பிள்ளைகளே, எந்த இடத் தில் நீங்கள் வைக்கப்பட்டிருந்தாலும், தேவனிடம் நீங்கள் பெற்றிருக்கும் ஆவியின் சார்பிலும் பெலத்திலும் உங்களைச் சார்ந்த பெலவீனரை தைரியப் படுத்துங்கள். தேவன் தந்த நம்பிக்கை யின் அடிப்படையில் சோர்ந்து போனவர் களை உற்சாகப்படுத்தி, தளர்ந்து போன முழங்கால்களைத் திடப்படுத்துங்கள். பயம் வேண்டாம் திடமனது வேண்டும்.

நோயுற்றோர், துன்புறுவோர், வாழ்விழந்தோர் மத்தியிலோ சபை யிலோ, பணித்தளத்திலோ எங்கு பணி செய்தாலும் நீங்கள் திடமனதுடனிருக்க வேண்டும். அப்படியிருந்தால் மட்டுமே நீங்கள் பிறரை உண்மையாகத் தைரியப் படுத்த முடியும்.

பவுல் தன்னோடு பிரயாணம் பண்ணினவர்களைத் தைரியப்படுத்து முன் தேவனுக்குள் தன்னைத் திடப் படுத்திக் கொண்டான். ஆகையால்தான் அவன் அமைதியாயிருக்கவும், மற்றவர் களை அமைதிப்படுத்தவும் கூடுமாயிருந் தது. அனைத்துப் பிரயாணிகளும், நடுங்கித் திகைத்துக் கொண்டிருந்த போது பவுல் சொன்னதைக் கவனியுங் கள்: "மனுஷரே திடமனதாயிருங்க ளென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன்."

நீங்களும் தேவனிடத்தில் இத்தகைய நம்பிக்கை வைத்து அமைதி யாகவும், திடனாகவும் இராவிட்டால் சபையிலோ, உலகிலோ சேவை செய்ய முடியாது. நீங்கள் பலப்பட்டால் மட்டுமே பிறரை பலப்படுத்த முடியும். எபேசி 6:10-ன்படி கர்த்தரிலும் அவரு டைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

நான் தேவனை விசுவாசிக்கிறேன்

பவுலின் விசுவாசம் தேவன் மேலிருந்தது. அந்த கப்பலில் இருந்த எவருக்குமே தேவன்மேல் விசுவாசம் இருந்ததாகத் தெரியவில்லை. தேவனை ஒருவேளை சிலர் நினைத்துப் பார்த்தால் கூட அவர் தங்களைக் கைவிட்டு விட்டார் என்றுதான் எண்ணியிருந் திருப்பார்கள். ஆனால் இரவில் தேவ தூதன் ஒருவன் பரத்திலிருந்து இறங்கி வந்து, பவுலினருகில் நின்று தெய்வீகப் பிரசன்னத்தாலும், நல்ல செய்தியாலும் அவனைத் திடப்படுத்தினான். எனவே அவன் தைரியமாக தான் தேவனில் விசுவாசம் வைத்திருப்பதாகக் கூற முடிந்தது. அவர் கூறிய கருத்து என்ன? "நான் தேவனை விசுவாசிக்கிறேன் - நீங்களும் அவரை விசுவாசியுங்கள் - அவரது வார்த்தைகளை விசுவாசியுங்கள், அவரது இரக்கம் வலிமை ஆகியவற்றை விசுவாசியுங்கள்" என்பதாகும். தேவனை விசுவாசித்தபடியால் அவர் அமைதி யாகவும் சமாதானமாகவும் திடனாகவும் இருக்க முடிந்தது. நாம் எப்படியிருக்கி றோம்?

தேவன் அவனிடம் கூறியது : "பவுலே பயப்படாதே, ... இதோ உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார்". தேவனை விசுவாசித்த அவன் அவரது வார்த்தைகளையும் விசுவாசித்தான். அவற்றை உட்கொண்டு தனக்குச் சொந்தமாக்கி அதன்மூலம் எழுப்புதலடைந்தான். தேவன் வாக்குப் பண்ணியதை இந்தக் கடும் புயலிலும் நிறைவேற்றுவார் என்ற உறுதியுடன் அதைப் பற்றிக் கொண்டான். எந்த மனிதருக்கும் எந்த ஒரு சேதமும் வருவ தில்லை என்று நம்பினான். தன்னையும் தன்னோடுள்ளவர்களையும் பாதுகாப் பதாகச் சொல்லப்பட்ட தேவ வார்த்தை போதுமானது என்று விசுவாசித்தான். அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவனுக்குச் சொல்லப்பட்டது அப்படியே நடைபெறும் என்று அவன் விசுவாசித் தான்.

நம்பக்கூடாத ஒரு சூழலில் அவன் விசுவாசித்தான். யூரோக்கிலி தோன் என்ற பயங்கரமான புயலினால் கப்பல் இங்குமங்குமாக தள்ளப்பட்டு கரைக்கு நேராகத் தள்ளப்பட்டது. ஆனால் அவனது விசுவாசம் அசைய வில்லை. கடும்புயல் அடித்து, கொடுங் காற்று வீசினாலும், காட்டு விலங்குகள் உங்களை விழுங்குவதற்காகத் துரத்தி னாலும் தேவனை விசுவாசிப்பது மேலானது.

சாதாரண விசுவாசம் சரியான காலநிலையிலும், அலைகள் குறை வாகவும் இருக்கும்போது மட்டுமே காணப்படும். ஆனால் மேகங்கள் இருண்டு புயல் கடுமையாக வீசும் போது அது ஒழிந்துபோய்விடும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விசுவாசமோ, இருளில் ஊடுருவிப் பார்க்கக்கூடியதும், குழப்பமான சூழலில் அமைதி காப்பதும், துக்கத்தின் மத்தியில் துதித்தும் பாடுவதும் அந்தகாரமான சூழலில் பிரகாசமாயிருப்பதாகும். நம்பிக் கையற்ற சூழலில் அவன் விசுவாசித்தான். "என் ஆத்துமாவே, தேவனை நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும்" சங்.62:5. "தேவன் நமக்கு அடைக் கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்" சங்.46:1-3.

தேவன் இன்றும் ஜீவிக்கிறார்

"ஆத்துமாவே நம்பு, எந்தத் தீமைக்கும் பயப்படாதே

வானத்தின் பெரிய கூரை பிளந்து போனாலும்

பூமியாகிய உருண்டை கோளம் வெடித்துச் சிதறினாலும்

தேவன் நம்மைப் பத்திரமாகப் பாதுகாப்பது உறுதி,

அவரை உத்தமமாய் நம்பு வோரை மட்டுமே,

எனவே ஆத்துமாவே ஏன் சோர்ந்து போக வேண்டும்!

கப்பல் உடைந்தாலும் தேவன் நம்மிடமுண்டு

உத்தம விசுவாசம் வெளிப்படை யாக பேசும்"

இவ்வாறு பவுல் உண்மையு டனும் உத்தமத்துடனும் தேவனை விசுவாசித்தான். எனவே அவனைச் சுற்றியிருந்தவர்களைப் பார்த்து "உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது" என்று துணிச்சலுடன் கூறினார்.

விசுவாசத்தை மோசமான கால நிலையிலும், முரட்டுமனிதர் மத்தியிலும

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

முன்னேற்றப் பணி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2022 ஆகஸ்ட் மாத பத்திரிகைக்காக என் தேவனை 'வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும்' துதிக்கிறேன் அப்.20:19. கடந்த மாதம் தேவ கிருபையால் உபவாச ஜெப ஊழியம் பற்றி எழுதினேன். இம்மாதம் '**முன்னேற்றப்பணி**' பற்றி, அதன் தேவையை குறித்து தூதன் வாசகருக்கு மிகவும் சுருக்கமாக எழுதுகிறேன்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஊழியம், இன்றைக்கு வடஇந்தியா சத்தீஷ்கர் மாநிலம் வரை வளர்ந்திருக்கிறது. அந்த ஊழியத்தை நடத்துகிறவர்கள் ஒவ்வொரு முறையும் ரயிலில் வட இந்தியா போய், திரும்பவும் மதுரை வருவது மிகவும் சிரமமானதால், தங்கள் அலுவலகத்தை மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றினார்கள். வாடகை கட்டிடம் என்றாலே அடிக்கடி மாற வேண்டிய நிலைமை ஏற்படுமே! இந்த நிலையில் சென்னையில் சொந்தமாக ஒரு இடத்தை ஊழியத்திற்காக வாங்க அந்த ஸ்தாபனத்தார் தீர்மானித்தார்கள். ஆனால் இடம் கிடைக்கவில்லை. காரணம், அவர்கள் காசோலை வழியாகவே பணம் செலுத்த முடியும். பொது மக்கள் காசோலை வழியாக பணம் வாங்க தயாராக இல்லை. எனவே விசுவாசிகள் யாராவது தங்களுக்கு சொந்தமான இடத்தைக் கொடுக்க அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

1955-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டாலும் கண்ணனூர் என்ற இடத்தில் C.S.I.போதகராயிருந்த எனது தகப்பனார் காலஞ்சென்ற **S.தேவதாசன்** அவர்கள், அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு, 1957-ம் ஆண்டு நாகர்கோவில் பட்டணம் வந்தார்கள். காரணம், **வருகையின் தூதன் பத்திரிகை எந்த சபை பிரிவையும் சார்ந்ததல்ல.** முதல் முதலாக ஹென்றி லேன் என்ற தெருவில் மேல் பக்கம் ஒரு வீட்டில் சில வருஷங்கள் வாடகைக்கு இருந்தார்கள். பின்பு கட்டட உரிமையாளர் மாற சொன்னதினால் அதே தெருவின் கீழ் பக்கம் சில காலம் வாடகைக்கு இருந்தார்கள். அந்த நாட்களில் நான் எனது பெற்றோருடன் தங்கியிருந்து படித்து வந்தேன்.

பின்பு **வெட்டூர்ணிமடம்** என்ற இடத்திற்கும், அங்கிருந்து **கேவ் தெரு** என்ற இடத்திற்கும் செல்ல வேண்டிய தாயிற்று. கடைசியாக 1969-ம் ஆண்டு நியுபோர்ட் தெருவில் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டது. வருகையின் தூதன் அலுவலகமோ நியுபோர்ட் தெருவின் எதிர்புறம் பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி சாலையில் (W.C.C. Road) ஒரு வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது.

ஆண்டவருடைய இரக்கத்தால், 1991-ம் ஆண்டு வருகையின் தூதன் துணை ஆசிரியராக நான் நியமிக்கப்பட்ட போது, கர்த்தர் என்னை வழிநடத்தினபடி வருகையின்தூதன் அலுவலகத்திற்காக **தேவ மகிமை** கட்டடம் கட்டப்பட்டது.

சுமார் 25 ஆண்டுகள் ஆன பின்பும் அந்த கட்டடம் பராமரிக்கப்படாதபடியால், சிதிலமடைந்தது. சென்னையை சார்ந்த ஒரு போதகர் குடும்பம் பெயிண்ட் பண்ணி உதவி செய்தார்கள். அப்பொழுது **வருகை யின் தூதன்** என்று எழுதப்பட்ட பெரிய எழுத்துக்களும், பக்கச் சுவர்களில் எழுதப்பட்ட சுவிசேஷ வசனங்களும் அழிந்துபோனது. ஆனால் ஆங்கிலத்தில் **DEVA MAHIMAI** என்று சிமென்டில் பொறிக்கப் பட்ட எழுத்துக்கள் இன்னமும் அழகாக உயரத்தில் உள்ளது. வாசகர் யாராவது அலுவலகம் வருவதாக இருந்தால், நியுபோர்ட் தெருவில் வலது பக்கம் 3-வது கட்டடத்திற்கு வாருங்கள் (கதவு எண் 3/8) என்று அன்பாய் கேட்கிறேன். முன்பக்கம் முழுவதும் கண்ணாடி போடப்பட்டிருக்கும். கண்ணாடி கதவில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்:

இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்.

இதற்கு அடுத்ததாக ஒரு கார் பார்க், அதற்கு அடுத்ததாக **தேவனுடைய வீடு** கட்டடம் இருக்கிறது. மாடியில் House of God என்று சிமென்டில் பொறிக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் தெருவில் வசித்து வந்த கிறிஸ்தவர்கள் தங்கள் சொத்துக்களை விற்றுவிட்டு தெருவை விட்டே சென்று விட்டார்கள். தற்சமயம் நியுபோர்ட் தெரு வியாபார ஸ்தலமாய் மாறி விட்டது. உபவாச ஜெபங்களுக்கு தூரமாய் போகும்போது சில நாட்கள் அலுவலகம் செயல்படாது. எனவே போன் பண்ணிவிட்டு வாருங்கள்.

சென்னை வாசகர் கவனத்திற்கு

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 3 மாதங்கள் தொடர்ந்து சென்னையில் உபவாச ஜெபம் நடைபெற இருக்கிறது. **எங்களுக்கு மிகவும் அன்பான சென்னை வாசகர்கள், தயவாய் இந்த உபவாச ஜெபங்கள் ஒன்றிலாவது கட்டாயம் கலந்துகொள்ள உங்களை மிகவும் அன்பாய் அழைக்கிறேன்.** உபவாச ஜெபங்களில் கலந்து கொள்ளும் நாளில் பிரஷர், சுகர் போன்ற வியாதிகள் எதுவும் உங்களை பாதிக்காது, வெகு நேரம் உபவாசித்து ஜெபிக்க முடியும்.

செப்டம்பர் – **Jesus Care's Assembly, Anna Nagar, Chennai**
அக்டோபர் – **Zion Prayer House, Villivakkam, Chennai**
நவம்பர் – **Christian Assembly, Ayanavaram, Chennai**

"ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்" ஏசாயா 66:13.

விபரங்களுக்கு :
அலுவலகம் : **95432 21008**
உதவி : **94897 40295**

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் தயவுசெய்து உங்கள் **பத்திரிகை பதிவு எண்**, உங்கள் **தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்
SMS அனுப்ப : **9489740295, 95432 21008**
e-mail:varukayinthoothan@hotmail.com

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

எடுத்துச் சொல்வது எளிதல்ல. அனேகர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தாலும் அதை வெளியே எடுத்துச்சொல்ல விரும்புவதில்லை. ஏனெனில் 'ஒருவேளை இது நடக்காவிட்டால் சத்துரு சந்தோஷப்படுவானே' அல்லது 'நான் தவறாக சொல்லி விட்டேன் என்று மக்கள் என்னைக் குறித்து வருத்தம் கொள்வார்களே' என்ற சிந்தனைக் குரல் உள்ளத்தில் ஒலிக்கிறது. இவ்வாறு பிசாசு விசுவாசத்தை அமைதிப்படுத்தி, தேவ மகிமையை அவமாக்கிவிடுகிறான்.

உத்தம விசுவாசம் என்னிலிருந்தால் "தேவன் உண்மையானவர், அவரது வார்த்தை மூலம் என்னால் எதையும் சாதிக்க முடியும்" என்று சொல்லலாம். அப்படிப்பட்டவர்கள் கஷ்டப்படும் மக்களை உற்சாகப்படுத்தி 'நான் தேவனை விசுவாசிக்கிறேன், என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர், இந்த ராத்திரியிலே என்னிடத்தில் வந்து பேசினார்' என்று தைரியமாகக் கூற முடியும்.

விசுவாசிகளுக்கு ஒரு அழைப்பு

அனைத்துக் கிறிஸ்தவர்களும் மாய்மாலத்தை விட்டுவிட்டு தேவனிடம் வர வேண்டும். அவரை நம்புவது போல நடிக்கக்கூடாது. சுவிசேஷம் சத்தியமான தென்றால் ஏன் அதைப் பேச திகைக்கிறோம்? தேவ வாக்குத்தத்தங்கள் உண்மையானால் அவற்றை நம்புவதில் ஏன் தயக்கம்? இந்த அனுபவம் துணிச்சலானது என்று சொல்லுகிறீர்களா? தேவன் தமது வாக்கை நிறைவேற்றுவதில் தவறுவதில்லை. "தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக" ரோமர்3:14. பரலோகமும், பூலோகமும் தடுமாறலாம் ஆனால் உயரமும் உன்னதமுமான தேவன் தமது வார்த்தைகள் நிறைவேறாமற்போக விடுவதில்லை. எனவே நீங்கள் பெற்றுக் கொண்ட செய்தியைப் பிரசித்தம் பண்ணுங்கள். உங்கள் விசுவாசம் வெளிப்படட்டும்.

கிறிஸ்துவை நேசிக்கிறவர்களே, அவரோடுள்ள உங்கள் அன்பையும் விசுவாசத்தையும் பிறருக்கு வெளிப் படுத்தியிருக்கிறீர்களா? அல்லது முது குக்குப் பின் மறைத்து வைத்திருக்கிறீர் களா? வெளியே வந்து உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள்.

பரலோகமும், பூலோகமும் தடுமாறலாம் ஆனால் உயரமும் உன்னதமுமான தேவன் தமது வார்த்தைகள் நிறைவேறாமற்போக விடுவதில்லை.

தேவன் நமது நம்பிக்கையும் அனுகூலமான துணையுமானவர்

God is our Hope and a very present help

Rich Carmicheal

இத்தலைப்பில் தேவனுடைய நற்பண்புகள் விளக்கப்படுகின்றன. அவரையும் அவருடைய இயற்கை பண்புகள் ஆகியவற்றை மையமாகக் கொள்வது முக்கியமானது. ஏனெனில் அவரும் அவரது தெய்வீக சம்பத்தும் நமக்கு இன்றியமையாதவை. நம்பிக்கை சமாதானம், உற்சாகம், பெலன், ஆறுதல், உதவி, விடுதலை போன்ற எவை நமக்குத் தேவையாயிருந்தாலும் தேவனிடம் நாம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இங்கு படித்து அறியலாம்.

எரேமியாவின் வாழ்வில் அவன் தேவனையும் அவரது பண்புகளையும் மையமாகக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட தாக்கத்தை புலம்பலின் புஸ்தகம் 3-ம் அதிகாரத்தில் காணலாம். சமாதானமும் நம்பிக்கையுமற்ற மிகவும் இக்கட்டான நிலையில் எரேமியா இருந்ததை 1-ம் அதிகாரம் 20-ம் வசனம் காண்பிக்கிறது. ஆனால் அவன் ஆண்டவருக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுத்தான். இதை என் மனதில் வைத்து நம்பிக்கை கொண்டிருப்பேன் - அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை - அவைகள் காலைதோறும் புதியவை - கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன் - கர்த்தர் நல்லவர் - தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். இவ்வாறு வெறுமை நிலையிலிருந்த அவன் அப்போது அவருடைய இரக்கங்களையும், உத்தமத்தையும், நற்குணத்தையும் எண்ணி நம்பிக்கை பெறுகிறான்.

அனுகூலமான துணை

சங்கீதக்காரன் 46-ம் சங்கீதத்தில் ஆபத்தான கொடிய காலத்திலும் தேவன் அடைக்கலமும் பெலனுமாயிருப்பதைப் புரிந்து கொண்டவராக விளக்குகிறார். அதே சங்கீதத்தில் தேவன் எப்படிப் பட்டவர் என்பதையும் அவர் எவற்றையெல்லாம் செய்யக்கூடியவர் என்பதையும், ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம் சங்.46:2,3 என்று விளக்குகிறார். 7-ம் வசனத்தில், "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்" என்றும் கூறிவிட்டு 5-ம் வசனத்தில் அவர் சகாயம் பண்ணுவார் என உறுதிகொள்கிறார்.

அவர் உதவி செய்கிறவர் மட்டுமல்ல மிகத் தாராளமாக உதவி செய்கிறவர் எனக் கூறலாம். அவரை நாம் முற்றிலுமாக நம்ப வேண்டும். 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்' என்பதாக 10-ம் வசனம் குறிப்பிடுகிறது.

கடும்புயல் அடித்து, கொடுங்காற்று வீசினாலும், காட்டு விலங்குகள் உங்களை விழுங்குவதற்காகத் துரத்தினாலும் தேவனை விசுவாசிப்பது மேலானது.

தேவனில் உறுதியான எதிர்பார்ப்பு

"என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும், அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர். நான் அசைக்கப் படுவதில்லை, என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது" சங். 62:5-7. அவர் தாம் செய்வேன் என்ற காரியங்களை முற்றிலும் செய்வார் என்று நம்பி எதிர்பார்க்கலாம்.

எனது பேத்தி ஒரு நாள் தொலைபேசியின் மூலம் எனது கிட்டார் தனக்கு சில நாட்கள் இரவலாக வேண்டும் என்று கேட்டாள். வீட்டிற்குச் செல்லும்போது கொண்டுகொடுப்பதாக பதிலளித்தேன். அவள் நம்பிக்கையுடன் காத்திருந்தாள். அதன்படி நானும் அவள் கற்றுக்கொள்ள உதவியாக அதனை அவளுக்கு கொண்டு கொடுத்தேன். அவள் என்மேல் முழு நம்பிக்கை வைத்திருந்தாள்.

என்னைப் போன்ற அபூரணமான ஒரு மனிதன் மேல் அவள் இத்தனை நம்பிக்கை வைத்திருக்கும் போது பரிபூரணரான தேவன்மேல் நாம் நம்பிக்கை வைப்பது எவ்வளவு முக்கியமானது! அவர் உத்தமர், வாக்கு மாறாதவர், சகல சம்பூரணமும் அவரிடமுள்ளது. அவர் நமது பரமதகப்பன்.

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை அப்போஸ்தலர் 27-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அவர் சென்ற கப்பல் பயங்கரமான புயலில் மாட்டிக்கொண்டது. தேவன் அப்போஸ்தலனிடம் எந்த உயிர்ச்சேதமும் வருவதில்லை என வாக்குப் பண்ணியிருந்தார். எனவே கப்பலில் இருந்த அனைவரும் நம்பிக்கையிழந்த போதும் பவுல் திடமனதுடன், "ஆனபடியினாலே மனுஷரே திடமனதாயிருங்கள்; எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" அப்.27:25 என்று மக்களை தைரியப்படுத்தினார்.

தேவனைக் கிட்டிச்சேருங்கள்

இந்த சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த நாட்களில் ஜெபத்தின் மூலமாகவும் வேதவசனத்தின் மூலமாகவும் நாம் தேவனிடம் அதிகமதிகமாகக் கிட்டிச்சேருவது இன்றியமையாதது. "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" யாக்.4:8. அவர் தம்மை நமக்கு அதிகமாக வெளிப்படுத்தி அவரது தெய்வீக ஆசீர்வாதங்களை நம்மோடு அளவில்லாமல் பகிர்ந்து கொள்வார். ஏசாயா 40:29-ன்படி "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தை பெருகப் பண்ணுகிறார்". அவர் எல்லாப்புத்திக்கும் மேலான

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

சமாதானத்தை அருளுகிறவர் பிலிப்.4:6,7. தம்முடைய ஐசுவரியத்தின்படி குறை வையெல்லாம் நிறைவாக்குகிறவர் பிலிப்.4:19. மரண இருளின் பள்ளத்தாக் கிலே ஆறுதலளிப்பவர் சங்.23:4. ஆபத்துக் காலத்தில் விடுவிப்பவர் சங்.50:15. தீமை யிலிருந்து பாதுகாக்கிறவர் சங்.91.

தேவ வசனத்தை வாசிப்பதில் சமயம் செலவிடும்போது அது ஜீவனும் வல்லமையுமுடையது என அறியலாம் எபி.4:12. சில வேளைகளில் ஒரு சத்தியம் அல்லது வாக்குத்தத்தம் நமது வாழ்வின் சூழலையே மாற்றிவிடக் கூடியதாயிருக் கலாம். வாக்குத்தத்தத்தில் நிலைத்து நின்றால் தேவன் அங்கு நம்மை சந்திப் பார். நீங்கள் கலக்கமடைந்த உங்கள் சூழலில் தேவனோடு உத்தமமாயிருந் தால் அவரை நம்பலாம். அவருடைய குமாரனுடைய தைரியத்தில் அவரு டைய வாக்குத்தத்தங்களைக் கேட்க லாம், அப்படிக் கேட்டால் அவர் தள்ளிவிடமாட்டார். நிச்சயமாகவே விடுதலைக்கான ஒரு மார்க்கத்தை ஏற்படுத்துவார். அவரை நம்பினால் தேவன் உங்களுக்காக மண்ணையும் விண்ணையும் அசைக்கக்கூடியவர் என்று A.W.Tozer கூறியிருக்கிறார்.

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்" சங்.55:22.

எல்லாருக்கும் பணிவிடையாள்

Servant unto all

Sabine Ball (1925-2009)

ஒருவர் பெரியவராக கருதப் படுவதற்குக் காரணமாயிருப்பது அவரது பணபலம், அந்தஸ்து அல்லது சாதனைகள் என்று நான் எண்ணிய நாட்களுண்டு. நானும் உயர் பதவியைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தும் உலகத்தின் கண்களில் ஒரு சிறிய அளவில் அதனைப் பெற்றும் அது மகிழ்ச்சியற்ற ஒரு வேட்கையாகவே இருந்தது.

ஆனால் நான் இயேசுவை சந்தித்த பின்பு ஆண்டவர் மேன்மை யான வாழ்வுக்கு நேர்எதிரான ஒரு கருத்தை எனக்கு காண்பிக்க ஆரம்பித் தார். "உங்களில் பெரியவனாயிருக் கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனா யிருக்கக்கடவன். தன்னை உயர்த்து கிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" மத்.23:11, 12. இது ஆண்டவராகிய இயேசு தமது சீஷருக்கும், கூடிவந்த மக்களுக்கும் எனக்கும் கற்பிக்கிற பாடம்.

ஊழியம் செய்வதற்கு அநேக வழிகளுண்டு. தேவன் எனக்கு தெரிந் தளித்த பாதை சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதாகும். புரூக்லின் என்ற இடத்தில் மேய்ப்பனின் வீடு என்பதைத் திறந்து 22 வாலிபர்களுடன் ஆறு ஆண்டுகளுக்கு முன் ஊழியத்தை ஆரம்பித்தேன். அது அசுத்தமான சேரியாயிருந்தது. எங்கள் இல்லம் அனைவருக்கும் திறந்து வைக்கப் பட்டபடியால் தேவையுள்ளவர்கள் வந்து உதவிகளைப் பெற்று ஆண்டவராகிய இயேசுவையும் அறிந்து கொண்டனர்.

எங்கள் குழுவில் ஆண்களும் பெண்களுமுண்டு. நாங்கள் சொந்த சார்புக்காக பட்டணத்தின் வெவ்வேறு பகுதிகளில் வேலை பார்த்தோம். இவ்வித்தை நடத்துவதற்காகத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பெண்களுக்கு நான் தலைவியாயிருந்தேன். எனது பழைய பெருமை அகற்றப்பட்டு தேவ அன்பி னால் நிரப்பப்பட்டேன். அதிக தூரங் களை ஜாக்கிரதையுடன் கடந்து செல்லவும் எனது சரீரம் அதன் மூலம் பெலனடையவும் கண்டேன். இழிவான பணிகள் என்று கருதப்பட்டவை மகிழ் வான வாய்ப்புகளாக மாறிவிட்டன. ஆவிக்குரியபடி கவனிக்கப்படாத மக்க ளோடு நட்பு ஏற்படவும் அவர்களுக்கு ஊழியம் செய்யும் இந்த வாய்ப்புகள் கிடைத்தன.

தேவன் எனக்கு வைத்திருந்த திட்டத்தில் இது ஆரம்பமாயிருந்தது. சில காலத்துக்குப் பின்பு மியாமி என்ற இடத்திற்குச் சென்று என் இரு மகன் களோடு குளிர்காலத்தைச் செலவிட திட்டமிட்டேன். யூத மக்களுக்காக ஒரு பெரிய பாரத்தை தேவன் எனக்கு அளித்திருந்தார். நான் ஜெர்மனியைச் சார்ந்தவளும் ஹிட்லருடைய ஆட்சியில் வளர்க்கப்பட்டவளுமாயிருந்தேன். கிறிஸ்துவின் அன்பு அப்படிப்பட்ட அழிவின் பகைமையிலிருந்து மக்களை மீட்க நான் வாஞ்சித்தேன். என்னை தென் மியாமி கடற்கரைப் பகுதியில் இல்லப் பணி செய்யும் சேவைக்குப் பதிவு செய்து கொண்டேன். எண்பது வயதான ஒரு விதவையிடமிருந்து அழைப்பு வந்தது. அவர்களது தேவை ஜெர்மன் பாஷை பேசும் வீட்டு பணியாளர் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆண்டவரது தெளிவான அடையாளம் எனவும் புரிந்து கொண்டேன்.

அந்த விதவை தன்னைச் சுற்றி லும் பிறர் இருக்க விரும்பாதவர்கள். ஆனால் அவர்களுடைய மகன்தான் அவர்களுக்கு ஒரு உதவியாளர் தேவை எனக் கட்டாயப்படுத்தியதாகத் தெரிந் தது. இந்த விலையேறப்பெற்ற ஆத்து மாவை தேவன் விரும்பினார். சிறிது சிறிதாக அவர்களது நம்பிக்கையையும் நட்பையும் தேவ அன்பும் பரிவும் என் இருதயத்தை நிரப்பியதால் பெற்றுக் கொண்டேன். அவர்களது தகப்பனார் ஒரு வைத்தியராகவும் சட்டநிபுண ராகவும் செயல்பட்டிருக்கிறார் என்ப தையும் தாயார் ஆஸ்த்மா நோயாளி என்பதையும் தனது பள்ளி வருடங் களைக் குறித்தும், நண்பர் வட்டங் களைக் குறித்தும் இறுதியில் சொந்த பட்டணத்தை விட்டு பாரீஸ் சென்ற தையும் இறுதியாக ஐக்கிய மாகாணம் சென்றதையும் மறுபடியும் மறுபடியும் சொல்வதை நான் பொறுமையுடன் கவனித்தேன்.

ஒரு நாள் அவர்களையும் அவர் களது இரு விதவையான சிநேகிதி களையும் ஒரு கிறிஸ்தவ ஐக்கியக் கூடுகைக்காக அழைத்தேன். அது ஆவி யால் நிரப்பப்பட்ட லுத்தரன் சபையால் நடத்தப்பட்டது. போதகர் ஹாரிஃ புல்லிலவ் ரோமர் 11-ம் அதிகாரத்தி லிருந்து தேவ ஜனங்களில் காணப்படும் இருதய கடினத்தைப் குறித்துப் பேசினார்.

அவர்கள் அவர் பேசியதை நன்கு கவனித்தனர். போதகரை அவர்கள் நேசித்தார்கள். அங்கிருந்த மக்களுடைய அன்பும் அவர்களைப் பிரமிப்படையச் செய்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு வாரமும் கூட்டங்களில் கலந்து கொண்டனர். தேவன் அவர்களைத் தமக்கு நேராக இழுத்துக் கொண்டார்.

எனக்குக் கொடுக்கப்பட்ட பணி பிற்பகல் 1 மணிக்கு முடிவடைவதால் அதற்குப் பின் அருகில் சென்று இளைப் பாற கர்த்தர் ஒரு இடத்தைத் தரும்படி யாக ஜெபித்து எதிர்பார்த்துக் கொண் டிருந்தேன். சமையலோடு சேர்ந்து தூங்குவதற்கு இடமளிக்கும் ஒரு வேலைக்காக விண்ணப்பித்தேன். அத்தகைய பணியும் கிடைத்தது.

அநேக பணியாளர்களுடன் உயர்ந்த சமுதாயத்தில் மியாமியில் வாழ்ந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. இவைகளையெல்லாம் ஆண்டவர் இயேசுவுக்காக விட்டுவிட்டு இந்தியா வந்திருந்தேன். ஆண்டவராகிய இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனும் என்பதைக் கண்டுகொண்டதனால் ஏற்பட்ட விளைவு இது. ஆண்டவர் இப்போது இந்த வீட்டில் கொண்டு வந்திருக்கிறார்.

வீட்டுத்தலைவி என்னோடு அதிக மாகப் பழகுவதேயில்லை. பல வேலை களைச் செய்யும்படி ஒப்புவித்தாலும் என்மீது நம்பிக்கை கொள்ளவில்லை. எல்லாவற்றையும் செய்து, அதற்கு மேலாக செய்தாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. தேவனே, ஆவிக்குரியபடி செத்துப்போன ஒரு வீட்டில் தவறுதலாக வந்துவிட்டேனோ என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்.

எபேசி.6:5-8 வசனங்கள் மூலமாக பதிலைப் பெற்றுக்கொண்டேன் (வாசிக்க) அந்த வீட்டுத் தலைவி ஐரோப்பா போகவும் அவளது இரு பிள்ளை களையும் கவனிக்க அவளது பெற்றோர் இந்த வீட்டிற்கு வரவும் நேரிட்டது. அன்று மாலையிலேயே வீட்டிற்குள்ளே ஒரு அனல் ஏற்பட்டது. அந்த வீடு எங்கள் அனைவருக்கும் சொந்த வீடாய் மாறியது. ஒரு நாள் இரவு சமைய லறையை சுத்தம் பண்ணிவிட்டு குடும்ப அறையில் நுழைந்தேன். புதிய தலைவி என்னை உட்காரும்படி கூறி என்னையே அன்போடு பார்த்தார்கள். பல கேள்வி களை என்னிடம் கேட்ட போது நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

'நான் சபையைத் தேடிக் கொண்டிருக்கிறேன். சத்தியத்தை நான் அறிந்து கொள்ள வேண்டும்' என்றார்கள். ஏற்கெனவே அடுத்த வீட்டில் வாழ்ந்து கர்த்தருக்குள் மரித்த ஒருவரால் அவர்களுக்குள் விதை போடப்பட்டிருந்தது. அந்த நபர் யூதராயிருந்து ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள். தேவன் இந்த இல்லத்திற்குக் கொண்டு வந்த நோக்கம் உண்டு என்று உணர்ந்து அவரைத் துதித்தேன்.

ஒரு நாள் வேலையை சீக்கிரமாக முடித்தபோது குடும்ப அறையில் நாங்கள் இருவரும் மட்டும் இருந்தோம். அவர்கள் என்னிடம் தேவபிரசன்னத்தின் ஒரு அடையாளம் கிடைத்தால் மட்டுமே சந்தோஷமாயிருக்க முடியும் என்றார்கள். பின்பு நான் சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தபோது தலையை வேதனையுடன் பிடித்துக் கொண்டு மருந்துப்புட்டிகள் வைக்கப் பட்டிருந்த இடத்தை நெருங்கினார்கள். தனக்கு பல நாட்களாகத் தலைவலி இருப்பதாகக் கூறினார்கள்.

அவர்களுக்காக ஜெபிக்கும்படி தேவன் பேசினார். இருவரும் எனது அறையில் சென்று ஜெபித்தோம். அவர்களது வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஒரு குழந்தையைப் போல் மாறிவிட்டார்கள். ஒரு அதிசயத்தை அவர்கள் எதிர்பார்த்ததுபோல நான் ஜெபித்தபோது அந்த அறை தேவ பிரசன்னத்தால் நிறைந்துவிட்டது. கண்களைத் திறந்தபோது சந்தோஷத்தோடு, சபைன் (Sabine) ஆண்டவர் சுகமளித்து விட்டார். யாரோ என்னைத் தொட்டார்கள் எனக் கூறிய போது இருவரும் தேவனுக்கு நன்றி செலுத்தினோம். அவர்கள் இயேசுவைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண் டார்கள்.

இப்போது நான் ஜெர்மனி திரும்பி செல்ல வேண்டும். உண்மையாகவே தேவனை சேவிப்பது நமது வாழ்வில் மிகப்பெரிய தீரச்செயல்.

நான் ஒருவருக்கும் அடிமைப் படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்ட வனைப் போலவுமானேன் *1 கொரி.9:19.*

குழியிலிருந்து எழும்பும் ஜெபங்கள்

Prayers from the pit

Kim Butts

சமீபத்தில் எனது குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டமும் நிராசையுமான சம்பவங்களால் கடின அனுபவங்களைக் கடந்து வர நேரிட்டது. நீங்களும் இத்தகைய கடினங்களைக் கடந்து வந்திருக்கலாம். சோதனையின் பெரும் பாரம் என்னை அதிகமாக அழுத்திய போது நான் நேசித்தவர்கள் எனது சமாதானம் சந்தோஷம், திருப்தி ஆகியவற்றைக் குன்றச் செய்வதாகப் பயமுறுத்தப்பட்டேன்.

ஒரு அன்பு நண்பரிடம் என் பாரத்தைக் கூறியபோது, அவர் 40-ம் சங்கீதத்தை எடுத்துக்கூறி தேவசமூகத்தில் சிறிதுநேரம் தரித்திருக்கும்படி ஆலோசனை தந்தார். அது எனக்கு ஒரு அற்புதமான அனுபவம் மட்டுமல்ல ஒரு பரிசு என்றும் சொல்லலாம். அந்த சங்கீதத்தின் முதல் மூன்று வசனங்களை மட்டும் மையப்படுத்திக் கூற விரும்பு கிறேன். அவற்றில் மிகப்பெரிய ஐசுவரியமும், பொக்கிஷங்களும் புதைந்து கிடக்கின்றன. அவ்வசனங்களிலிருந்து வெளிப்படுத்துவதும், நம்மை நிலைப் படுத்துவதுமான சில காரியங்களைக் குறித்து தியானிப்போம்.

1. கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் (சங்.40:1)

காத்திருக்கும் ஜெபம் : பிதாவே, உமக்காக பொறுமையுடன் நான் காத்திருக்க உதவி செய்யும். குழப்பங்கள், வேதனைகள் போன்றவற்றின் மத்தியில் உமது இனிய ஆறுதலான பிரசன்னத்தை நாங்கள் உணரட்டும். எனக்கு அருமையானவர்கள் ஒவ்வொருவருக்காகவும் நான் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஜெபத்திற்கும் நீர் பதில் தருவீர் என்று உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவர்கள் எந்த நிலையிலிருந்தாலும் நீர் ஒருவரே அவர்கள் தேவைகளைச் சந்திக்கக் கூடியவர். எனது பாரங்களை சிலுவையினடியில் இறக்கிவைக்க பெலன் தாரும். அப்போது என் மனித பெலத்தால் செய்யக்கூடாதவைகளை நீர் செய்வதை நான் தெளிவாக உணர முடியும். எனக்கு அன்பான மக்களின் வாழ்வு, உள்ளம், இருதயம் ஆகியவற்றில் நீர் பூரணமாக அவர்களைச் சுற்றிலும், அவர்கள் மூலமாகவும் கிரியை செய்வீர் என்று நான் நம்பிக்கை கொள்ள உதவி செய்யும். என்னை நான் மறைத்து உமது பாதையில் நடக்கட்டும். உம் அசைவாடுதலுக்கு நான் தடையாயிராதபடி என்னைக் காத்துக் கொள்ளும்.

2. அவர் என்னிடமாய்ச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார் (சங்.40:1)

எனது ஜெபம் : சராசரங்கள் அனைத்தையும் படைத்த தேவாதி தேவன் என்னிட மாய்ச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டது எத்தனை ஆச்சரியம்! என் இருதயம் நன்றியால் பொங்குகிறது. என் பரிதாபமான உதவி கேட்கும் குரலைக் கேட்க என்னைத் தகுதியாக எண்ணினீரே, எனக்கும் சமயம் ஒதுக்கித் தந்தீரே, எனது வேதனைகளின் மத்தியில் நான் எண்ணிப் பார்க்காத அளவு எனக்காகக் கவலைப்படுகிறீரே, அப்பா பிதாவே, உமக்கு நன்றி. எனது நொறுங்குண்ட ஆவிக்குப் பதிலளிக்க என்னிடமாய்ச் சாய்ந்தீரே, உமது பரிசுத்த நாமத்தை நோக்கி நான் கூப்பிடும் போதெல்லாம் நீர் கவனித்துக் கேட்கிறீர் என்று அறிந்து உமக்கு நன்றி சொல்கிறேன்.

3. பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலு மிருந்து என்னைத் தூக்கி எடுத்தார் (சங்.40:2)

எனது ஜெபம் : அன்பான இயேசுவே, எனது அழுகுரலை நீர் கேட்டு என்னை ஆழமான குழியிலிருந்து தூக்கிவிட்டீர். நான் நிர்ப்பந்தமான நிலையில் நம்பிக்கை யிழந்து சந்தேகமும், மன அழுத்தமும் நிறைந்து காணப்பட்டேன். செழியில் நான் மூழ்கியபோது நீர் என்னை நம்பிக் கையால் நிறைத்து நான் இதுவரை கண்டிராத இருளான இடத்திலும், காலத்திலும் ஒளியைக் காணச் செய்தீர். எனக்குக் கீழிருந்த சகதியிலிருந்து நீர் என்னை இழுத்து எடுத்ததற்காக என் இருதயம் நன்றியால் நிறைகிறது. நான் துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப் படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை *2 கொரி.4:9.* எனக்காக எதிரியை மடங்கடித்தீர்

4. என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி என் அடிகளை உறுதிப்படுத்தினீர் (சங்.40:2)

எனது ஜெபம் : கிருபை நிறைந்த தேவனே, நீர் என்னைச் சேற்றிலிருந்து தூக்கி எடுத்தபின் மெதுவாக என் கால்களை உறுதியான கன்மலையின்மேல் நிறுத்தினீர். இப்போது நான் இடறுவதில்லை. எனக்கு உறுதியான அஸ்திபாரம், பாதுகாவல், இடம் ஆகியவை தேவை என்று அறிவீர். அதன் மூலம் நான் மகிழ்ச்சியுடன் நடனமாட முடியும் என்றும் அறிவீர். பாதாளத்தின் விளிம்பில் நின்று நான் தள்ளாடினபோது நிலைதடுமாறாமல் காத்துக் கொண்டீர். நான் விழுந்து விடுவேனோ என்று பயந்த போது நீர் கை நீட்டி கிருபையாய் என் நம்பிக்கையிழந்த சூழலிலிருந்தும் சத்துருவின் வல்லடியிலிருந்தும் என் ஆத்துமாவைத் தப்புவித்தீர். கிறிஸ்துவாகிய கன்மலையின்மேல் என்னை நிறுத்தி விட்டீர்.

5. என் வாயில் தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டைத் தந்தீர் (சங்.40:3)

எனது ஜெபம் : தூய ஆவியானவரே, நீர் என்னை மீட்டு, என் வாயினை உம்மைப் பாடும் புதிய துதிகீதங்களால் நிரம்பும் வரை என் சந்தோஷம் என்னைவிட்டு அற்றுப் போயிருந்தது. நீர் மறுபடியும் எனக்கு நம்பிக்கையும் சமாதானமும் ஜீவனும் தந்தீர். நான் என் பார்வையை பரிசுத்தராகிய உம்மீதுமட்டும் வைக்கும் படி ஞாபகப்படுத்தினீர். எனக்கும் எனதருமையானவர்களுக்கும் வாழ்வு கொடியதாயிருந்தபோது எப்படிக் களிகூருவது என்பதை புரிந்துகொள்ள உதவி செய்தீர். ஒவ்வொரு வினாடியும் தயவாகப் புதுப்பாடல்களைக் கற்றுத் தாரும். எனது மிகுந்த விருப்பத்துடன் ராஜாதிராஜாவை ஆராதிக்க விரும்பு கிறேன். உமது வசனத்தில் நான் கவனம் செலுத்துவேனாக. அதில்தான் சத்துருவைத் தோற்கடிக்கும் பட்டயமிருக் கிறது. அழிவுக்குரிய எண்ணங்கள் செயல்கள் ஆகியவற்றிலிருந்து என்னை மீட்டதற்காக உமக்கு நன்றியைக் காணிக் கையாக்குகிறேன்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. நீர் ஒருவரே கர்த்தர், நீர் வானங்களையும் வானாதி வானங்களையும் அவைகளிலுள்ள சர்வசேனைகளையும் பூமியையும் அதிலுள்ள சகல சிருஷ்டிகளையும், சமுத்திரங்களையும், அவைகளிலுள்ள சகல ஜீவராசிகளையும் உண்டாக்கினீர். அவற்றையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர். வான சேனைகள் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றன நெகே.9:5-6. தேவன் இவற்றையெல்லாம் செய்துவிட்டார், அதனால் ..... "அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள்" சங்.40:3.

எனது கொடிய சூழல்களிலும் தேவன் என்னை வெற்றியுடன் நடத்தினதைப் பார்த்து ஆச்சரியமடைந்து, சர்வ வல்ல தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லவர் என்று அவரைப் புகழுவார்கள். இப்படிச் செய்கிறவர் இன்றும் செய்து கொண்டிருக்கிறார் என்றும், இன்னும் அவர் செய்வார் என்றும் அவரை நம்புவார்கள், அவரைப் புகழுவார்கள். "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படிச் செய்வது கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" 1 தெச.5:16-18. இப்பகுதி கஷ்டமான சூழ்நிலைகளின் மத்தியிலும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்று கூறுகிறது.

அது எப்படி முடியும்? நமது இருதயங்களை தேவ சமூகத்தில் ஜெபத்தின் மூலம் ஊற்றிவிட வேண்டும். நம்பிக்கை இழந்த சூழல்களிலும் விசுவாசத்தை விடக்கூடாது. அப்போது அவர் நம்மிடமாய்ச் சாய்ந்து, நமது ஜெபத்தைக்கேட்டு, குழியிலிருந்து தூக்கி உயர்ந்த கன்மலையின்மேல் உயர்த்துவார். நாம் வெற்றியுடன் அவரைத் துதிப்போம். அனேகர் இதனைக் கேட்டு அவரது வல்லமையைக் கண்டு அவர் மீது தங்கள் நம்பிக்கையை வைப்பார்கள்.

அவரது மீட்பை இரகசியமாக வைக்க வேண்டாம். அவருக்கு துதியையும் மகிமையையும் செலுத்துங்கள்! "அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள்" சங்.40:3.

ஒரு தேவ மனிதர் விழுந்து போனால் அதற்காக துக்கப்படுகிறோமா? அல்லது அவரைக் குறித்துக் குறை கூறுகிறோமா? தேவன் தாமே நமக்கு நல்ல பாதையைக் காண்பிக்கட்டும்.

பிரகாசிக்கிற மக்கள் மேல் சாத்தான் கண் வைப்பான் என்பதை மறந்துவிடாதீர். எனவே யாரேனும் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டால் அவர்களுக்காக நாம் விசேஷமாக ஜெபிப்பது மிகவும் அவசியம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒரு உறுப்பு பாடுபட்டால் அனைத்து உறுப்புக்களும் பாடுபடும் (1 கொரி.12:12-27)

துன்மார்க்கர் கூட செய்யாத முறையில் உடன் கிறிஸ்தவர்களைத் தாழ்வாக நடத்துகிறீர்களா? அது வெட்கக்கேடான ஒரு காரியம். "ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" மத்.7:12.

மற்றவர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்க வேண்டியது நமது பொறுப்பு. இவ்வாறு தேவ அன்பை அவர்களுக்குக் காண்பிக்கலாம். நமது நடைமுறைகள், வார்த்தைகள், சத்தியத்தைப் பேசுதல் ஆகியவற்றால் அன்பு காண்பிக்கப்பட வேண்டும். "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" கொலோ.3:13.

தேவனுடைய ராஜ்யத்திற்குள் மக்களைக் கொண்டு வாருங்கள். அவர்களிடம் அன்பு காட்ட எவ்வளவு காலம் கொடுக்கப்படும் என்று நாம் அறியமாட்டோம். இயேசுக் கிறிஸ்து நமது பாவங்களுக்காகத் தம்முடைய ஜீவனை அர்ப்பணித்த அன்பை நம்மைச் சுற்றி வாழும் அனைவருக்கும் எடுத்துக்கூற நீண்ட நாட்களில்லை. நமது வாழ்வாலும் வார்த்தைகளாலும் இவற்றை வெளிப்படுத்த நமது ஆண்டவராகிய நசரேயனாகிய இயேசுவைப் பின்பற்றுவோம்.

அனேகர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தாலும் அதை வெளியே எடுத்துச் சொல்ல விரும்புவதில்லை.

கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது

The love of Christ constraineth us

W.C.Moore (1890-1980)

தூய ஆவியானவரால் தேவனுடைய அன்பு தொடர்ந்து நம்மில் பொழியப்பட இருதயத்தில் இடமுண்டாக்குவோமாக. கோபம், பொறாமை, தீய எண்ணம், வெறுப்பு, சண்டை, பகைமை, பேராசை, இச்சை, அவிசுவாசம் போன்றவற்றிற்கு ஆத்துமாவில் இடமளித்தால் ஆண்டவர் தமது அன்பை பலவந்தமாக நமக்குள் செலுத்தவோ, ஆத்துமாக்களுக்கான பாரத்தை நமது இருதயங்களில் ஊற்றவோ முடியாது.

தேவ ஆவியாகிய புறாவானவர் கோபம், தீமையான சொற்கள், இரக்கமின்மை ஆகிய தீய கழுகுகள் நம் இருதயங்களில் இருந்தால் அங்கு வாசம் பண்ணுவதில்லை. புறாக்கள் ஒருபோதும் அன்னிய பறவைகளுடன் இணைவதில்லை.

நான் என் சகோதரனுக்குக் காவலாளியா?

நம்மைச் சுற்றிலும் துன்மார்க்கர் வாழுகிறார்கள். தேவகுமாரனுடைய பரிவு அவர்களைப் பார்க்கும்போது நம்மில் ஏற்படுகிறதா? நாமும் ஒருகாலத்தில் பாவிகளாகத்தானே இருந்தோம்! அன்று தேவனுடைய அன்பை நாம் அறியவில்லை. கிறிஸ்துவின் அன்பை நம்மைச் சுற்றிலும் வாழும் மக்களுக்கு விளங்கப் பண்ணுகிறோமா? அவர்கள் நம்மை ஏமாற்றுகிறவர்களாக இருந்தாலும் அவர்களையும் ஆதாயப்படுத்திக் கொள்ள முயற்சிக் கிறோமா?

ஒரு சகோதரனோ சகோதரியோ பாதை தவறுவதையோ, வெதுவெதுப்பான நிலைக்குக் கடந்து செல்லுவதையோ, பாவத்தில் விழுவதையோ காணும் போது அவர்களுக்கு நேராக விரலை நீட்டி, நாம் அவர்களை விட எவ்வளவு நல்லவர்கள் என்று எண்ணுகிறோமா? (ஏசாயா 58:9, 65:5, லூக்.8:9-14) அல்லது அவர்களுக்காக உத்தமமாக ஜெபிக்கிறோமா? சத்தியத்தை அன்புடன் அவர்களுக்கு எடுத்துக்கூற ஜாக்கிரதைப்படுகிறோமா? அப்.20:31, எபே.5:15.

மேலும் நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டிய அளவு ஜெபித்திருந்தால் அவர்கள் பாவத்தில் விழுந்திருக்க மாட்டார்கள் என்று உணருகிறீர்களா? நாம் நமது சகோதரர்களுக்குக் காவலாளிகள். நாம் பிறரை நம்மைப்போல் நேசித்தால் (மத்.22:36-40) அவர்களுடைய ஆவிக்குரிய நிலையைக் குறித்து அக்கரையின்றி இருக்க முடியாது.

அன்பிற்காக ஜெபியுங்கள்

Pray for Love

Andrew Murray

"நான் உங்களிடத்தில் வைத்திருக்கும் அன்புக்கொப்பாய் நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங் கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" 1 தெச.3:12-13.

எத்தனை விசேஷமான ஜெபம்! அன்பில்லாமல் இது கூடாதது. தேவ வல்லமையினால் மட்டுமே அவர்களுடைய இருதயங்கள் உண்மையான பரிசுத்தத்துக்கும் சகோதரரை நேசிக்கவும் பலப்படுத்தப்பட முடியும். இந்த ஜெபத்தை அடிக்கடி சொல்லுவோம். இது நமக்கும் நம்மைச் சுற்றி வாழுகிறவர்களுக்கும் பலனளிக்கும். பரிசுத்தத்திற்காக ஜெபிக்கிறீர்களா? உங்கள் சகோதரருக்காக இதயபூர்வ அன்பைக் காண்பியுங்கள்.

"கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப் பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

நடத்துவாராக" 2 தெச.3:5. ஆண்டவராகிய இயேசு இதை நமக்குச் செய்கிறார். நமது இருதயங்களை எப்போதும் தேவனைப் பற்றும் அன்புக்கு நேராக அவரே நிரப்புகிறார். தேவனே உம்முடைய கிருபையினாலே எனக்கு அன்புள்ள இருதயத்தைத் தாரும்.

பிலிப்.1:4-11 வசனங்களில் பவுல் ஏறெடுக்கிற ஜெபத்தைப் பாருங்கள். அவர் தமது பொறுப்பிலுள்ள அனைவருக்காகவும் ஏறெடுக்கும் ஜெபத்தில் அன்பை முக்கியப்படுத்துகிறார். "உங்களுக்காகவும் .... மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன். அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்" கொலோ.2:1-2. விசுவாசி தேவனை அறிகிற அறிவில் வளர அவர்களுடைய இருதயங்கள் அன்பினால் இணைக்கப்படுவது மிகவும் அவசியம் என்று குறிப்பிடுகிறார். தேவன் அன்பாயிருக்கிறார். அவரது அன்பு நித்தியமானது, அதற்கு முடிவில்லை. கிறிஸ்தவர்கள் அன்பினால் இணைக்கப் பட்டிருந்தால் மட்டுமே அந்த அன்பை அனுபவமாக்க முடியும்.

பவுலின் இந்த ஜெபங்கள் நாம் தியானிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் அனேக காரியங்களை முன் வைக்கின்றன. இந்த தெய்வீக எண்ணங்களும் சிந்தனைகளும் நமது இருதயங்களில் வளர சமயம் செலவிடுவோம். சூரியன் இலவசமாக ஒளியையும் வெப்பத்தையும் அளித்து புற்பூண்டுகளும் தானியமும் வளர்ந்து நல்ல பலனைத் தர பயன்படுவதை விட மேலாக தேவன் தமது அன்பை பன்மடங்காக அளிக்க விருப்பமுடையவராயிருக்கிறார். கிறிஸ்தவனே, ஜெபிக்க முடியவில்லை என்ற உணர்வு இருக்கிறதா? தெய்வீக அன்பின் இந்த வார்த்தைகளை உங்கள் இருதயத்தில் வைத்து சிந்தனை செய்யுங்கள், அப்போது ஒரு வலுவான உணர்வும் மகிழ்வான நம்பிக்கையும் ஏற்படும். தேவன் எதைச் செய்யக் கூடியவர் என்று அறிந்து கொள்வீர்கள். அவர் உங்களை அன்பில் பெருகச் செய்வார். உங்கள் இருதயத்தை பலப்படுத்தி அவருக்கு முன்பாக பரிசுத்தமாக வாழவும் சகோதரரில் அன்பு கூரவும் உதவி செய்வார்.

"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்.... நான் திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களாலே ஒன்றும் செய்யக் கூடாது" யோவா.15:25.

கனியற்ற நிலை, கனி தருதல், அதிகக் கனிகளைத் தருவது போன்ற நிலைகள் மகிமையின் மேல் மகிமை அடைவதை காண்பிக்கின்றன. அதிக கனிகள்தான் பிதாவை மகிமைப் படுத்தும் நிலை. 'நீங்கள் அதிக கனிகளைக் கொடுப்பதால் பிதா மகிமைப் படுவார். நீங்களும் எனக்கு சீஷராயிருப்பீர்கள்' யோவா.15:8.

ஆவியின் கனி

தேவன் எதிர்பார்க்கும் கனி கலா.5:22, 23 வசனங்களில் காணப்படுகிறது. ஆவியின் கனி ஆண்டவராகிய இயேசுவின் தன்மையைக் காண்பிக்கிறது. அதில் குறைவுமில்லை, அதிகபடியுமில்லை. அது கொத்தான ஒரு கனி. அது கிறிஸ்துவின் சாயலையும் அதின் 9 கிருபைகளையும் காண்பிக்கிறது. அன்பு இருந்தும் கோபம், சுய அடக்கம் இல்லாமை போன்றவை காணப்பட்டால் என்ன பயன்? நீடிய பொறுமையுடையவன் நீண்ட முகத்தோடிருக்கலாமா? அதிக விசுவாசமிருந்தும் சாந்தகுணம் இல்லாவிடில் என்ன பயன்? சீனாய் மலையின் இடிமுழங்க ஒலியினைக் கேட்டும், கல்வாரி மலையின் அன்பு இல்லாவிட்டால் பிரயோஜனமில்லையே! உபதேசங்களைப் பாதுகாக்கப் பேச்சில் வெற்றி இருந்தாலும் செயலில் ஒன்றுமில்லையே! நற்குணம் நிறைந்த ஒருவன் கவலையும், களைப்புமுடையவனாயிருக்கலாமா? ஆக அனைத்து கிறிஸ்தவ கிருபைகளும் திட்டப்படி இணைந்து கவர்ச்சியுடனிருந்தால் மட்டுமே மக்கள் நம்மில் கிறிஸ்துவைக் காண முடியும்.

தொடர்ந்து வளரும் வாழ்வு

A life of constant growth

Ruth Paxen (1889-1949)

"நாமெல்லாரும் திறந்த முக மாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறது போலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரை அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" 2 கொரி.3:18.

உத்தம ஆவிக்குரிய வாழ்வில் எந்த ஒரு அனுபவமும் அதே நிலையிலிருப்பதில்லை. மேல் நோக்கிய பார்வையும், திரை நீக்கப்பட்ட முகமும் கர்த்தருடைய மகிமையைப் பிரதிபலிக்க வேண்டும். அவரை அறிகிற அறிவு வளரும் போதும், அவரோடுள்ள உறவு ஆழமாகும் போதும் அவரது சாயல் நம்மில் வளரும்.

மத்திய சீனாவிலுள்ள யாங்சே நதியில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தேன். இப்போதுதான் கனத்த மழையும் புயலும் ஓய்ந்து, சூரிய ஒளி வெளிப்பட்டிருந்தது. நான் கப்பலின் மேல் தளத்திற்குச் சென்று கர்த்தரிடமிருந்து வரும் விலையேறப்பெற்ற செய்தியைப் பெற உந்துதல் பெற்றேன். பொதுவாக அந்த நதியின் நீர் சேறு நிறைந்து கலங்கலாயிருக்கும். ஆனால் அன்று அதில் வானத்தின் நீலநிறமும், பனியின் வெண்மையும் பிரதிபலித்தன. அப்போது தூய ஆவியானவர் 2 கொரி. 3:18-ஐ என் மனதில் தந்தார். 'நீ கவர்ச்சியற்ற இந்த நீரைப்போல் இருந்தாலும், தேவனுக்கு நேராக முழுவதும் நீ திரும்பும் போது, உன் வாழ்வு அவருக்குத் திறந்தளிக்கப்படுவதால் அவரது மகிமை உன் மேல் பிரகாசிக்கும். அப்பொழுது தேவ சாயலைப் பெறுவதால், உன்னைப் பார்க்கிறவர்கள், உன்னையல்ல உன்னிலுள்ள கிறிஸ்துவைக் காண்பார்கள்'. கண்ணாடி பிரதிபலிப்பது போல கர்த்தருடைய மகிமையை நாம் பிரதிபலிக்கிறோமா?

கிறிஸ்துவின் சாயலைப் பெறுவதில் முன்னேற்றம் வேண்டும். மகிமையின் மேல் மகிமையும் அடைய வேண்டும். ஆவிக்குரிய வாழ்வு வளர்ந்து உன்னத நிலையை அடைய வேண்டும்.

மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வாக்கு

The hidden word

C.H.Brown

"நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" சங்.119:11.

தேவனுடைய வாக்கை நமது உள்ளங்களில் மறைத்து வைப்பது, தீமைக்கு எதிரான ஒரு பெரிய பாதுகாவல்.

தாவீது, களைப்பின்றி சோதித்துக் கொண்டேயிருக்கிற சாத்தானிடமிருந்து தப்பிக்கொள்ள ஞானமுள்ள முன்னெச்சரிக்கையாக, தன் இருதயத்தில் வேத வசனத்தை மறைத்து வைத்திருந்தான். அவன் மேற்கொண்ட அதே சோதனைக் காரனை மேற்கொள்ள இந்த இரகசியத்தை நாமும் கடைபிடிக்க வேண்டும். தீமை செய்வதற்கான சோதனை வரும் போது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இதயத்திலிருந்து உடனடி பதில்வரும்.

வேறு எதுவும் அளிக்காத வல்லமையை தேவ வசனம் அளிக்கக் கூடியது. மிகப்பெரிய குழப்பமான சூழல்களிலும் இது வல்லமையுடன் செயல்படுகிறது. பணிகளிலும் பாடுகளிலும் தேவ பிள்ளைகளை இது தைரியப்படுத்துகிறது. அவர்களை இது உத்தம இரத்த சாட்சிகளாக மாற்றியிருக்கிறது. தேவன் மேலுள்ள அவர்களது விசுவாசத்தால் அவர்கள் பயமுறுத்தல்களுக்கு அஞ்சவில்லை. இந்த ஜீவ வசனம் இருதயத்திற்குள்ளே ஜீவிக்கும் வல்லமையாக செயல்படுகிறது. பரிசேயர் இதனை வெளிப்புறமாக அணிந்திருந்தனர். எனவே அது ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

தீமையான பரிசுத்தத்தையும் தேவ சித்தத்துக்கு எதிரான தன்மையையும் அவர்களில் உருவாக்கிற்று.

இருதயத்தில் மறைத்து வைக்கப் பட்ட வசனம் உறையிலுள்ள வாளுக்கு ஒப்பானது. ஒரே நிமிடத்தில் அதை வெளியிலெடுத்து பயன்படுத்தலாம். திருப்பி பேசுவதில் திறமை படைத்தவர் களும் சோதனைக்காரனை அடக்க முடியாது. ஆனால் வசனமோ தேவனு டைய ஜீவனும் வல்லமையுமாயிருப்ப தால், எதிரியின் வரவைக் கண்காணிக்கிற ஒரு காவற்காரனுக்கு ஒப்பாயிருக்கிறது. சத்துரு எந்தத் திசையிலிருந்து நம்மைத் தாக்குவான் என்பதை நாம் அறிய மாட்டோம். ஆனால் இந்தத் தெய்வீக விசை நம்மில் இருக்கும் போது அது சத்துருவை கவனித்துக் கொள்ளும்.

மிகப்பெரிய திட்டம்

தாவீது வசனத்தை இருதயத்தில் மறைத்து வைத்துக் கொண்டது ஒரு சுயநலமற்ற செயல். தன்னைப் பெரியவ னாகக் காண்பிக்க விரும்பாமல் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்யக்கூடாது என்ற அவனது விருப்பத்தை நாம் இங்கு காண்கிறோம்.

நாம் கவனமற்றிருக்கும் போது, சத்துரு நம்மைத் தாக்கிவிட முயற்சிக் கலாம். இந்தப் பாதுகாவலான வலிய ஆயுதத்தை நாம் எப்போதும் வைத்துக் கொள்ள தேவன் உதவி செய்வாராக.

எழுப்புதலுக்காக ஜெபித்திடு!
எழுப்புதலுக்காக பிரசங்கித்திடு!

சென்னை மாவட்டத்தில்

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **17-09-2022** 3வது சனிக்கிழமை
காலை 10 மணி - மாலை 5 வரை

இடம் : **Jesus Care's Assembly**
3,Padi pudhu nagar
Anna nagar west extension
Chennai 600 101

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்**
மொபைல் : 95432 21008

தேவனுடைய வார்த்தை அக்கினி போன்றது

God's word is like a fire

முப்பத்து மூன்று ஆண்டுகள் மொரேவியன் மிஷனெறிகள் **லாப்பறடாரில்** கடுமையாக எதிர்ப்புகளின் மத்தியில் உழைத்தும் பயனற்ற நிலையில் அவர் களது முக்கிய மிஷன் நிலையமாகிய ஹோப்டேலிலிருந்து திரும்பி விடுவதற் கான ஆலோசனையிலிருந்தனர். ஆனால் 1804-ம் ஆண்டு ஒரு மிஷனெறி 'இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தார்' லூக்.19:10 என்ற வசனத்தின் மீது பிரசங்கிப்பதை ஒரு புறக்கணிக்கப்பட்ட ஏழை பெண் கேட் டாள். அந்த வசனம் அவள் உள்ளத்தைத் தொட்டது. அனைவராலும் புறக்கணிக் கப்பட்ட அவள் தன் பாவங்களைக் குறித்து ஆழமான பாவ உணர்வினைப் பெற்றாள். அன்று இரவு முழுவதும் நாய்கள் தங்கியிருந்த ஒரு குடிசையில் தங்கினாள். தான் மனிதர் வாசம் பண் ணும் இடங்களில் வாசம் பண்ணத் தகுதி யற்றவள் என்ற உணர்வுடனிருந்தாள்.

அந்த வசனம் அவளது ஆத்துமா விற்கு ஜீவன் அளிப்பதாயிருந்தது. அவள் இனிய சமாதானத்தைப் பெற்றுக் கொண்டாள். உடனே இரட்சகரை துதிக்க ஆரம்பித்தாள். அந்த கிராமத் திற்கே அவள் ஒரு ஜீவனுள்ள நிலக்கரிக் கொள்ளியாக இருந்து அது முழுவதும் பற்றியெரிய காரணமானாள். வயோதி பரும் இளைஞரும் கூட அவள் மூலமாக வல்லமையான பாவ உணர்வுக்குள் வந்தனர். எல்லாக் குடிசைகளிலும் பாடலின் சத்தமும், ஜெப சத்தமும் கேட்கப்பட்டது. சபைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. இரட்சிப்பின் செய்தியைக் கேட்க மக்கள் திரளாய் ஆவலுடன் கூடிவந்தனர். அவர்களே தங்கள் இன மக்களுக்கு மிஷனெரிகளாக மாறினர். தேவபணி தொடர்ந்தது. நாடு முழுவதும் இயேசுவின் அன்பால் நிரம்பி வழிந்தது.

இதுவே **லாப்பறடாரில்** ஏற்பட்ட பெந்தெகோஸ்தின் அனுபவம். அது ஒரு வசனத்தால் மூட்டப்பட்டது. "என் வார்த்தை அக்கினியைப் போலும் ..... இருக்கிறதல்லவா?" எரே.23:29.

நம்பக்கூடாத ஒரு சூழலில் அவன் விசுவாசித்தான். யூரோக்கிலிதோன் என்ற பயங்கரமான புயலினால் கப்பல் இங்குமங்குமாக தள்ளப்பட்டு கரைக்கு நேராகத் தள்ளப்பட்டது. ஆனால் அவனது விசுவாசம் அசையவில்லை.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Church of God(Full Gospel) in India**
Thirumalapuram,Villuppanur, Srivilliputhur 626 138
Cell: **97915 96305**

நாள் : **31.08.2022,** புதன்கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** மொபைல் : *9543221008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

முதலாவது தேவனோடு **நல்மனம்** பொருந்த வேண்டும். இரண்டாவதாக **ஒருமனதோடு** ஜெபிக்க வேண்டும். மூன்றாவதாக அவர்கள் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்கு **ஆதாயம்** பண்ணும்படியாகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். இவைகளை நிறைவேற்றினால் **எழுப்புதல்** நிச்சயம்

சபையானது உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தைரியமிழந்து காணப்படுகின்றனர். அவர்கள் எழுப்புதலின் நம்பிக்கையை இழந்து விட்டனர். ஆனால் **எழுப்புதல்** நிச்சயமானதும் தவிர்க்க முடியாததுமாகும். அதற்கு தேவஜனம் தேவனோடு ஒப்புரவாக வேண்டும்.

சபைகளில் சுயாதீனம் அதிகரித்து விட்டது. மேலும் தேவ ஜனத்தின் மத்தியில் ஒற்றுமையில்லை. நாம் **உலகத்**தோடு ஒத்துப்போகிறோம்.

உத்தம மனந்திரும்புதல் என்பது நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற விழிப்புணர்வாகும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason